உ
சிவமயம்



அமரர்

# தம்பிள்ளை நடராசா

அவர்கள்

இறைவனடி சேர்ந்தமை குறித்த

# நினைவஞ்சலி மலர்

12.06.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும்
கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும்
கொண்டமைந்து வாழ்ந்த

அமரர்

# தம்பிப்பிள்ளை நடராசா

அவர்கள்

இறைவனடி சேர்ந்தமை குறித்த

# நினைவஞ்சலி மலர்

12.06.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்கு இந்நூல்


அன்பினால் அணைத்து
பண்பினால் பிணைத்து
எம் அனைவரிற்கும்
தந்தையாகவும், தலைவனாகவும்,
ஆசானாகவும் இருந்த
உங்களுக்கு இந்நினைவு நாளில்
உம் திருப்பாதங்களுக்கு
இம்மலரினை
காணிக்கையாக்குகின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பிறப்பு

10
11
1918

இறப்பு

13
05
2004

அமரர்

# தம்பிப்பிள்ளை நடராசா

அவர்கள்

## திதி வெண்பா

கொக்குவிலின் மேற்குதித்த தம்பிப்பிள்ளை நடராசா
மிக்கு திகழ் தாரணவை காசிதனில் – சிக்கலின்றி
முப்பத்தொரு தினத்தில் தேய்பத் திணை திதியில்
அப்பொற்பதமடைந்தார் சிறந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர்

# தம்பிப்பிள்ளை நடராசா

அன்று



இன்று



## அமரரின் பாரியார்



தோற்றம்
07.05.1929

மறைவு
20.03.1988

# இரத்தினம் நடராசா

## திதி வெண்பா

பார்பிரபவ பங்குனி ஏழுரவி
பூர் திருதியை புகலும் புண்ணிய நாள் - பேர் பெற்ற
நடராசா நரிமணி நாடுபுகழ் இரத்தினம்
நடராஜன் தாளணைந்தாள் நவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்ந்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித்து ஏத்தியும் பாடியும் வழிபடு மதனாலே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளம்
குளிரவென் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி
யெங்கும் குழாம் பெருகி
விழாவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மி மிகு திருவாரூரில்
மழவிடையாற்கு வழி வழி யாளாய்
மணஞ் செய் குடிப்பிறந்த
பழவடியா ரொடுங் கூடி யெம்மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா! நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறனைப் பெருவாழ்வில்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணநேயா
ஒப்பிலா மாமணிக் கிரி வாசா
வித்தக ஞான சத்தினி பாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்



(கலிவெண்பா)

திருச்சிற்றம்பலம்.

**தொல்லை யிலும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
திருவா சகமென்னுந் தேன்.**

நமச்சிவாய வாழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தேநின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணை கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண் நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும்ஆறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கல்லா மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய் ஆயினவெல்லாம் போயஅகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங் கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால்விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள்உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமாம் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்குஅரிய நோக்கே நுணுக்குஅரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லல் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொலுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாரின் அறப்பாதையிலே .....

உலகஞ் சிறந்து உறுதி காண
கலகம் நீக்கும் கணபதி துணையாம்
கொக்குவில் மேற்கு அருணாசலம் தம்பிப்பிள்ளை
தக்கதோர் துணைவி ஆச்சிமுத்து அம்மையும்
பல்லோர் போற்றவாழ்ந்த இல்லற வாழ்வில்
நல்லதோர் விளக்காய் நலமுடன் உதித்தவர்
பக்தி நெறிநின்று பண்புடன் வாழ்ந்த
வித்தக அமரர் **தம்பிப்பிள்ளை நடராசா**
கார்த்திகைப் பத்து ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினெட்டில்
கீர்த்தியுடன் வந்து பேர்திகழ வாழ்ந்தார்.

கண்ணியமாய் வளர்ந்த காளையாம் இவருக்கு
புண்ணிய விதிப்படி ஆண்டு இருபத்தெட்டில்
நலமிக்க தம்பதி நாகலிங்கம் நாகம்மா
குலத்து வந்துதித்த உத்தமி இரத்தினத்தை
கொக்குவில் கிழக்கில் ஆயிரத்துத் தொளாயிரத்து
நாற்பத்தாறில் நல்லதோர் நாளில்
திருக்கரம் பற்றித் திருமணஞ் செய்து
பெருகியே வாழ்ந்து பேர்பெற்றிருந்தார்.

செல்வங்கள் பதினாறும் மலிந்த இவர் வாழ்வில்
செல்வர்கள் மூவர் சிறப்புடன் உதித்தனர்
கல்வியின் குருவான நவரத்தின ராசாவை
இராசேஸ்வரியுடன் இனிதே இணைத்து
சுவர்ண லதாவுடன் காண்டீபனையும்
பெற்று மகிழ்ந்தார் இனிய பேரர்களாய்
இரண்டாம் மகனாம் ஜீவரத்தினராசாவை
தனபால சுந்தரியுடன் தவமே இணைத்து
ஜீவா, கோபால் பேரர் இருவரை
ஏவா மக்களாய் இனிதே பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைக்குட்டி ஜெயரத்தின ராசா தன்னை
சுமதியுடன் சேர்த்து செல்வி கஸ்தூரியை
பேர்த்தியாகப் பெற்று பெருமிதத்துடன்
மற்றையோர்க்கு உதவி மாண்புடன் வாழ்ந்தார்.

அன்புச் சகோதரி சரஸ்வதி தன்னையும்
அருமைச் சகோதரர் அருணாசலத்தையும்
பாசமுடன் தம்வாழ்வில் பண்புடன் இணைத்து
தேசம் புகழத் திகழ்ந்தார் நடராசா.

ஆரம்பத் தொழிலாக சித்த மருத்துவத்தை
அகமகிழ்வுடன் ஆரம்பித்து நடாத்தினார்
சுருட்டுக் கொம்பனியையும் தொடர்ந்து நடாத்தி
அருட்கடாட்சம் பெற்று மகிழ்ந்தார்.
கதுறு வெல பொலநறுவை குமரன் ஸ்ரோரை
சிறப்புற நடாத்த மக்களுக்குதவினார்.

இம்மைப் பயன்களை இனிதே பெற்றார்
மறுமைப் பயன்பெற மற்றையோர்க்கு உதவினார்
சாயி பஜனையுடன் இறைவழிபாடு செய்து
இகபர சுகம்பெற்று இனிதே வாழ்ந்தார்
பிறக்கின்ற பிறவிகளுக்கெல்லாம் ஈந்திடும் மனத்தை
ஈவான் கண்டாய் என்றே வாழ்ந்து
இறக்கின்ற போதிலும் உறுதியாகச் செயற்பட்டு
சிறக்கின்ற பேறு சீருடன் பெற்றார்.

இரண்டாயிரத்து நான்கு ஐந்தாம் மாதம்
பதின்மூன்றாம் நாட்காலை ஒன்பது பதினைந்தில்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பன்
இதம் அதைப் பெற்று பதமடைந்தாரே.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Sivasaryashathu"
Chief Priest,
Brammasri S. Srisanthanakkurukkal
Nanthavil Amman Thevasthanam,
Kokuvil.
T.P - 222 5382

# ஆத்மசாந்திப் பிரார்த்தனையுரை

சீர்மேவு யாழ் கொக்குவில் - பகுதியில் உயர் வேளாண் குலத்தைச் சேர்ந்த அமரர் **தம்பிப்பிள்ளை நடராஜா** அவர்களின் சிவப்பதப்பேறு குறித்த அஞ்சலி உரை.

அமரர் அவர்கள் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பிகையின் மீளா அடியவர்களில் இவரும் ஒருவர் ஆவார். மேற்படி ஆலயத்தின் சிவராத்திரி விரத 3ம் கால அபிஷேக பூஜையை பல ஆண்டுகளாக செய்து வந்தார். அத்துடன் தாய் தந்தையின் பிதிர் கடமைகளை நெறி முறை தவறாது அனுஷ்டிப்பவர். அன்னாரின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுவதுடன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மனோன்மணி அம்பிகையின் பாதங்களைப் பணிந்து சாருப, சாமிப, சாலோக முத்தியடைய வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

**ச.ஸ்ரீ சந்தனக் குருக்கள்**

*(நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பிரதமகுரு)*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனையுடன் பூவுலகைத் துறந்தார் அமரர் தம்பிப்பிள்ளை நடராசா

1995ம் ஆண்டு இடப்பெயர்வின் முன் பௌர்ணமி தினத்தில் சாயி நகர சங்கீர்த்தனம் வருவது எமது வழமை. அமரரான நடராசா அன்று பிற்பகல் தனது இல்லத்தில் வீட்டுப் பஜனை நடாத்த என்னை நாடினார். விரும்பிய பக்தர்களின் இல்லத்தில் வீட்டு பஜனை வைப்பது சுவாமி எனக்குத் தந்த பணி வராந்த பஜனையில் கலந்து, கொள்பவராய் இருந்தாலும் சரி கலந்து கொள்ளாதவராய் இருந்தாலும் சரி அவரது மனவிருப்பத்தை நிறைவு செய்யும்படி சுவாமி என்னைப் பணித்திருந்தார். அதற்கமைய மாதம் தவறாது பூரணை தினத்தில் அன்பர் நடராசா இல்லத்தில் பஜனை நடக்கும். பெரிய எண்ணிக்கையானவர்கள் பங்குபற்றமாட்டார்கள். ஆனால் அன்பர் நடராசா சிரத்தையாக இருப்பார். 1995 இடப்பெயர்வில் இருந்து மீண்ட பின்பும் அவர் பஜனையைத் தொடர விரும்பினார். சுவாமியின் படத்தின் முன் பூக்களைத் தூவி நீங்கள் தேவாரம் பாடுங்கள் என்றேன். அவர் தவறாது செய்து வந்தார்.

2003 இறுதியில் மீண்டும் வீட்டுப் பஜனையை நடாத்த விரும்பினார். வெளிநாட்டிலிருந்து வந்த தனது புதல்வர்களுக்கு பாபாவின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொடுக்க விரும்பினார். அவரது தூய அன்பை ஏற்று மீண்டும் பூரணை தினத்தில் பாபா பஜனை நடாத்தப்பட்டது.

நாங்கள் ஓரிருவர் கண்ணை மூடிப் பக்திபூர்வமாகப் பாடுவோம். அன்பர் நடராசாவிற்கு பரமதிருப்தி சித்திரா பௌர்ணமி வந்தது. அன்று செவ்வாய்க்கிழமை ஆனதால் எனதில்லத்தின் வாராந்த பஜனை நாள் அன்று மூன்று மணிக்குத் தயாராவீர்களா? என்றேன். சரியாக மூன்று மணிக்கு ஆசாராசீலராக பஜனைக்குத் தயாராக இருந்தார். முன்வரிசையில் இருந்து அஷ்டோத்தரம் முதல் அனைத்து பாடல்களையும் என் அருகே இருந்து பக்திபூர்வமாகப் பாடினார். மழையும் சோவெனப் பொழிந்தது. பக்தி உணர்வும் பக்குவமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் அவர் படுக்கையில் வீழ்ந்தாரென அறிந்தேன். அவரைப் பார்வையிடத் திருநீறுடன் சென்றேன். அவருக்கு சுய நினைவு இல்லை. திருநீற்றைப் பூசி அவருக்குச் சுகத்தைத் தரும்படி பகவானை வேண்டினேன். பகவான் "சுகந்தருவோம்" என்றார். சுகம் என்பது பலருக்கு புரியாத ஒன்று அவரைச் சூழ நின்றவர்களைப் பார்த்து சொன்னேன். அவருக்கு தேகநிலை நன்றாக உள்ளது. அவர் பிழைத்துவிடுவார் என்று பலரும் அவர் சுகம் பெறுவார் என்று நினைப்பார்கள். அவருக்கு நோயெதும் இல்லை. என்றேன். வியாழக்கிழமை காலை ஆயிரத்தெட்டு நாமவலி சொல்லும் போது அவரைப் பார்க்க விரும்பினேன். முடியவில்லை. அவர் சுகமாக போனதாக அறிந்து கொண்டேன். அதனை **'மரணம்'** என்று சொல்லுகிறார்கள். சுயநினைவு போன பின்பு யாகத்திற்குப் போகிறேன். அந்தச் சுவாமி அழைக்கிறார் என்ற வார்த்தைகளைச் சொல்லியபடி ஒருவர் மரணிக்க முடியுமா? மரணித்தால் மீண்டும் பிறந்து உழலவேண்டும் அல்லவா?

அமரர் நடராசா எத்தகைய மனிதன். அதை ஆராய்வது வேண்டாதது. அவர் முதுமை நிலை எய்தியவர். பகவானின் பஜனையில் நாட்டமுடையவர். தனது வெளிநாட்டில் வதியும் இருபிள்ளைகளுக்காக பஜனை செய்து தெய்வ அன்பு வேண்டினார். பூரணை தினத்தில் புனிதமான பஜனை செய்ய விருப்பங்கொண்டார். சித்திரா பௌர்ணமி பஜனையுடன் ஆனந்தமாக பூவுலகை நீத்து விட்டாரே. வியாழக்கிழமை - குரு நாளில் - அவர் யாத்திரை போகும் வேளை நான் அவருக்காக ஒரு பிரார்த்தனையில் தவறாது கலந்து - அவரது "சுகம்" கேட்டேன்.

துயிலைத் தடுப்பது நீறு-
சுத்தமாவது நீறு

தேகம் நீறாகிறது. தேகத்துக்குரியவர் அமரராகினார். தன் துணையின் நினைவிற்காக அவர் ஆரம்பித்த பிரார்த்தனை அவருக்கு வழித்துணையாக அழைத்துச் செல்கிறது. பிரார்த்தனையை விட வேறு எதுவும் இல்லை என்பதற்கு **'நடராசா'** இலக்கணமாகிவிட்டார்.

**குமாரசாமி சண்முகநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமிகு தந்தையே !

பாசத்தின் பிறப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
பாரினில் வாழ்ந்த - எம்
பாசமிகு தந்தையே
மக்கள் மூவரை சேர்த்தணைத்து
மானமாய் நாம் வாழ
வழியமைத்துத் தந்தாயே
உற்றவரும் மற்றவரும் - உம்
உதவிதனைச் சொல்ல நீர்
பெற்றவர்கள் நாமும்
பெருமிதம் கொள்கையிலே
கணப்பொழுதில் கண்மூடி
காலனிடம் சென்றாயோ
பிள்ளைகள் நாம் ஐயாவென
துடிதுடித்து கதறியழ
மருமக்கள் இங்கே உம்மை
மறக்காது தேம்பியழ
பேரப்பிள்ளைகள் - உங்கள்
அன்பைத்தேடியழ
பேசாது நீங்கள் தான்
பூவுலகம் மறந்தீரோ
நாம் காணும் கனவிலே
காண்பதெல்லாம் நின் முகமே
நாட்கள் இங்கே நகராமல்
நாடியாய் கழிகிறதே
எம் இனிய ஐயாவே
எம்மை விட்டு நீங்கள்
நெடுந்தூரம் போனதேனோ - எம்
நேசமனதை மறந்ததேனோ
உம்முடனே நாம் வாழ்ந்த
உன்னத நாட்கள்
என்றுதான் இனிவருமோ
ஏங்கியே அழுகின்றோம்.

*மகன்மார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்பட்ட நெஞ்சமானோம்

நெஞ்சு பொறுக்குது இல்லை

நினைவு அலைகள் மாளவில்லை

பஞ்சு போல் பரிதவிக்கும் – எம்மை

பாரினில் வாழ வைத்தீர்

கருமமே கடவுள் என்றீர்

கன்னியமே கடமை என்றீர்

வரும் இன்பம் யாவும் பெற்று

வருவோர்க்கு ஈந்து வந்தீர்

வஞ்சித்து விட்டான் காலன்

வகையறியாது வாடி வதங்குகின்றோம்.

மருமக்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்கடல் ஒன்று அமைதியானது

எனக்குள் நினைவுகளா....
எழுதுவதற்கு எத்தனையே...
அன்பின் விளக்கே என் ஆருயிர் அப்பப்பாவே
நினைவுகளில் குடிகொண்ட நீங்காத ஒளிச்சுடரே
நினைவாலும் செயலாலும் தனக்கென்றுவாழாது
பிறருக்கென்று வாழ்ந்த உத்தமரே
நோயினில் வீழாமல்
ஊன் உறக்கம் தொலைக்காமல்
தன்னையும் பிறரையும் வருத்தாமல் ஒரு நல்ல உள்ளம்
ஒரு நொடியில் இறைவனிடம் சேர்ந்ததோ...

பௌர்ணமி தோறும் பஜனைகள் செய்து
பாபாவை வழிபட்டீர்களே - இன்று
பயங்கரமிகு இவ்வுலகைவிட்டு வாழ்வதற்கு
பாபாகாலடி சென்று விட்டீர்களோ

பிறக்கின்ற பிறவிக்கெல்லாம் ஈந்திடும் மனத்தை
ஈவான் கண்டாய் என்றே வாழ்ந்து
இறக்கின்ற போதிலும் உறுதியாக செயற்பட்டு
சிறக்கின்ற பேறு சீருடன் பெற்றீரே
உளமார நாம் அழைத்த அப்பப்பாவே
இன்னமும் நம்பமுடியவில்லை – நீங்கள்
எமக்குள் இல்லையென்பது – தங்கள்
நினைவுகள் என்றுமே மறவாது.
மறுஜென்மம் என்றிருந்தால் மறுபடியும்
நீங்கள் எனக்கு பேரனாக வரவேண்டும்.

**தாங்கள் நிம்மதியாக முத்திபெற வேண்டி**
**ஸ்ரீ பகவான் சத்தியசாயி பாபாவை**
**பிரார்த்திக்கின்றேன்.**

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

**காண்டீபன்**
**பேரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் இதயத்தில்

அன்பையும் பாசத்தையும் பொழிந்து
எமைப்பெற்று தாலாட்டி வளர்த்த – தந்தையே
ஏற்பட்ட இன்னல்களையும் துன்பங்களையும்
எதிர்கொண்டு நல்ல நிலையில் வைத்த தந்தையே
இன்று எம்மைத் தனியே விட்டு
நீங்கள் எங்கே மறைந்து சென்றீர்கள்?

மீண்டும் ஒருதடவை வந்து உங்களைப்
பார்ப்போம் என இருந்த எம்மை
ஏனப்பா ஏமாற்றி விட்டுச் சென்றீர்கள்
தொலைபேசியில் உரையாடும் போது
உடனே வாருங்கள் என்று சொல்லியிருந்தால்
உங்கள் காலடியில் வந்து வீழ்ந்திருப்போம்!
ஏனப்பா எங்களை இப்படி தவிக்க விட்டீர்கள்!

அன்பின் ஒளியான மாமாவே
தக்கதொரு மருமக்களாய் எமையேற்று
தந்தையின் நிலையில் எமைக்காத்து வந்தீர்களே!
மக்களுடன் இல்லறத்தில் மகிழச் செய்து
பண்பான நிலைக்கு உயர்த்தி வைத்த
உயர்வான பண்புகொண்ட மாமாவே
எமைத் தனியே விட்டுப் பிரிந்து
எங்கே சென்றீர்கள்?

அப்பப்பா என தொலைபேசியில் நாம்
அழைக்கும் போது அழகாகக் கதைத்தீர்களே
படங்களைப் பார்த்து உங்கள்
முகத்தை மனதில் பதித்தோம்
அருகில் இருக்கின்றீர்கள் என்றிருந்தோம்
தூரத்திற்குப் போய்விட்டதாக அப்பா கூறுகிறார்
எங்கே அப்பப்பா போய்விட்டீர்கள்?

**கனடாவில் வசிக்கும்**
**பிள்ளைகள், மருமக்கள்**
**பேரப்பிள்ளைகள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவலைகள்

கண்களுக்கு நீருண்டு
காத்திருந்த எமக்கு நீங்களுண்டா?
பிரிந்தும் பிரியாது
உயிரும் உடலுமாயி
கண்ணின் இமையாய்
காலமெல்லாம் பௌர்ணமியாய்
எங்கள் நெஞ்சில் உங்கள் முகம் சிரிக்கும்
சுட்டெரிக்கும் சூரியனைவிட
சுட்டெரிக்கும் தீயைவிட
வானத்து குடையைவிட
வையத்து நீரைவிட
வணக்கத்து இறைவனை விட
உங்கள் பிரிவின் பூமியதிர்ச்சி
எங்கள் உயிரை வாட்டுதே!
பெரியப்பா!
பொன்னென்ன? பொருளென்ன?
வண்ண மலரென்ன
வடிவான பொருளென்ன?
வாயடைத்து நிற்கிறோம்.....
உங்கள் பிரிவால்
உறவுக்கு உயிராய்
உடலுக்கு குருதியாய்
எங்கள் நெஞ்சில்
என்றும் நீங்கள்
இருப்பீர்கள்
சுற்றிவரும் சூரியனாய்
சுடர்விடுகிறதே உங்கள் நினைவுகள்!

**உத்தமரே! உங்கள் ஆத்மா சாந்தியடைய**
**வேண்டுகின்றோம்.**

கங்கா நந்தகுமாரன் குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் செய்ய வேண்டியவை

1. இறைவனை வணங்குக.
2. இனிமையாகப் பேசுக.
3. உண்மையே பேசுக.
4. அன்பாகப் பேசுக.
5. நன்மையே பேசுக.
6. மெதுவாகப் பேசுக.
7. சிந்தித்துப் பேசுக.
8. சபையறிந்து பேசுக.
9. சமயமறிந்து பேசுக.
10. பேசாதிருந்தும் பழகுக.
11. சொல்வதையே செய்க.
12. சோம்பலை அகற்றுக.
13. கோபத்தை நீக்குக.
14. யோசித்துச் செய்க.
15. செருக்கை அடக்குக.
16. உயர்வையே எண்ணுக.

## சிந்தனைத் துளிகள்

1. சுதந்திரமானவனாக இரு, எவரிடத்தும் எதையும் எதிர்பார்க்காதே.
2. இல்லையென்று ஒருபோதும் சொல்லாதே, என்னால் இயலாது என்று ஒருநாளும் எண்ணாதே.
3. ஆன்மாவால் சாதிக்க இயலாத காரியம் என்று எதுவும் இருப்பதாக ஒரு போதும் நினையாதே.
4. நீ எதை நினைக்கிறாயே அதுவாகவே ஆகிறாய் நீ உன்னை வலிமையுடையவன் என்று நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுகிறாய்.
5. எவன் ஒருவனுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கொக்குவில் மேற்கு | கொக்குவில் கிழக்கு |
| **கார்த்திகேசு அருணாசலம்** | **சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளை** |
| **மனைவி** | **மனைவி** |
| **இராமுப்பிள்ளை சின்னக்குட்டி** | **கந்தப்பு அன்னப்பிள்ளை** |
| ↓ | ↓ |
| *முத்துப்பிள்ளை* | *அம்மாப்பிள்ளை* |
| *சின்னம்மா* | *சின்னம்மா* |
| *தங்கம்* | *கனகம்மா* |
| *சிவக்கொழுந்து* | ***ஆச்சிமுத்து*** |
| *சின்னத்தங்கச்சி* | *கார்த்திகேசு* |
| ***தம்பிப்பிள்ளை*** | *செல்லமுத்து* |
| | *சின்னத்தங்கச்சி* |

**அருணாசலம் தம்பிப்பிள்ளை**
மனைவி
**தாமோதரம்பிள்ளை ஆச்சிமுத்து**

| | | |
|---|---|---|
| நடராசா | சரஸ்வதி | அருணாசலம் |
| மனைவி | கணவன் | மனைவி |
| இரத்தினம் | அ. இராமநாதன் | சிவகாமிப்பிள்ளை |

நவரட்ணராசா – இராஜேஸ்வரி
ஜீவரத்தினராசா – தனபாலசுந்தரி
ஜெயரத்தினராசா – சுமதி


கௌரி
யமுனா
கங்கா
குகன்
விசயன்
நாமகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வபக்கம் வளர்பிறை
அமரபக்கம் தேய்பிறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ராம் பிறின்ரேஸ் கிரபிக்ஸ், பலாலிவீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org